1979 மார்ச் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னைக் கட்டாயப் படுத்திக் கேட்க முடியாது.

திரு. மு. அம்பிகாபதி : எதிர்க்கட்சிகளுக்கு நேரப்படி எந்தக் காரியமும் நடக்கக்கூடாது என்று கருதுகிறீர்களா ? எங்களுக்கு எதிரே உள்ள கடிகாரத்தைக் காணோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று அதைப் பற்றிச் சொன்னதன் பேரில் பழுது பார்க்க எடுத்துப் போயிருக்கிறார்கள். வேறு இரண்டு கடிகாரங்கள் இருக்கின்றன. திரும்பிப் பாருங்கள்.

(திரு. சி. ஆறுமுகம் உட்கார்ந்துகொண்டே பேசிக்கொண் டிருந்தார்).

நீதி மன்றங்களில் தமிழில் வழங்கப்படும் தீர்ப்புகள்

* வினா எண் 485—திரு. எஸ். வரதராஜன் திரு. எஸ். கணேசன் ; மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோர்ட்டுகளில் தமிழில் வழங்கப்படும் தீர்ப்புகள் செல்லாது என்று அண்மையில் உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்ததா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

THE HON. THIRU K. NARAYANASWAMY : (*a*) The High Court of Madras has set aside the judgment of a District Munsif on the ground that it was written in Tamil instead of in English, as Tamil has not yet been declared as the language for judgment in civil courts.

(*b*) Before declaring Tamil as the language for judgment in civil courts subordinate to High Court, the acts which are ordinarily used in civil courts have to be translated into Tamil. As soon as the Acts which are ordinarily used in civil courts are translated in to Tamil. Tamil shall be declared as the language for judgment in civil courts. At present, the State Official Langauge (Legislative) Commission is now translating the Acts which are ordinarily used before subordinate criminal courts.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : திரு. ஆறுமுகம் அவர்கள் முக்கியமான பிரச்சினையை எழுப்புகிறார். சபாநாயகர் வீட்டி லேயே. . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் உட்கார்ந்துகொண்டு பேசுவது பதிவாகாது. கேள்வி நேரம் முடிந்து இதைப் பற்றி யெல்லாம் கேட்கவேண்டும். திரு. ஆறுமுகத்திற்கு ஒரு வார காலமாகவே இப்படி ஒரு நிலைமை இருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : எங்கள் கட்சியைச் சார்ந்த ஆறுமுகம் அவர்கள் கேள்வி கேட்க அனுமதிக்கப்படவில்லை. அது வேறு. ஆனால் ஒருவார காலமாக அவருக்கு இப்படி ஒரு நிலை இருக்கிறது என்று சொன்னால் எப்படி ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முன்னால் உட்கார்ந்திருக்கிற உங்களுக்கே தெரியும். அவர் பேசுவதைப் பார்த்து நீங்களே உட்கார்ந்து விடுகிறீர்கள். அதுதான் நிலைமை. தயவு செய்து இதை உற்சாகப்படுத்துவதற்கு திரு. கிட்டப்பா போன்றவர்கள் துணை போகக்கூடாது. உட்கார்ந்து பேசுவது தவறு. அதைத் தான் சொன்னேனே தவிர, வேறல்ல. ஆறுமுகத்தின்மீது கிட்டப்பாவைவிட எனக்கு அக்கறை உண்டு. நிலைமையை வேறு பக்கத்திற்குத் திருப்பாதீர்கள்.

[முற்பகல் 9·40]

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, சிறைச்சாலைகளைப் பற்றிய கேள்வி இது. நாங்கள் எல்லாம் சிறையிலே இருந்தவர்கள். முக்கியமான கேள்வி கேட்க விரும்புகிறேன். தாங்கள் அனுமதிக்கவில்லையே. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் வேறு கேள்விக்கு போய்விட்டேன், உட்காருங்கள்.

திரு. சி. ஆறுமுகம் : ஒரு வாரத்திற்கு ஆறுமுகத்திற்கு அப்படித்தான் இருக்கும் என்று சொல்கிறீர்கள். நான் ரொம்ப சுத்தமாகத்தான் இருக்கிறேன். ஆகவே ஆறுமுகத்திற்கு ஒன்றும் இல்லை. I am alright.

திரு. க. சுப்பு : அப்படியென்றால் இந்த சிறைச்சாலைகளைப் பற்றி விவாதிப்பதற்காக அரை மணி நேர விவாதத்திற்கு—நாங்கள் வேண்டுமானால் எழுதிக் கொடுக்கிறோம்—அனுமதித்தால் நன்றாக இருக்கும். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை அனுமதித்தால் எனக்கு ஒன்றும் இல்லை. ?

திரு. க. சுப்பு : நீதிமன்றத்திலே தமிழிலே தீர்ப்புச் சொல்வது பற்றிய பிரச்சினை இது. . . .

1979 மார்ச் 20]

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, என்னுடைய தாழ்மையான வேண்டுகோள், மாண்புமிகு ஆறுமுகத்திற்கு ஒரு வாரமாக அப்படித்தான் இருக்கிறது என்று தாங்கள் சொன்னதை அன்புகூர்ந்து, அருள்கூர்ந்து, அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடும் படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் தவறாகச் சொல்ல வில்லை. நான் சொன்னதை தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது. அவர் உட்கார்ந்துகொண்டே பேசுகின்ற நிலைமை யைத்தான் ஒரு வார காலமாக இருக்கிறது என்று சொன்னேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தாங்கள் தவ றாகச் சொல்லவில்லை. இருந்தாலும் வெளியிலே படிக்கிறவர்கள் என்ன நினைத்துக் கொள்வார்கள் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் பின்னால் சொல்லி இருக்கிறேன், அதுபோதும்.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : தலைவர் அவர்களே, உங்கள் வீட்டில் திருட்டுப் போனது ஒன்று, இன்னொன்று பேரவைத் தலைவரின் காரே நடுத்தெருவிலே நின்றுபோய்விட்டது. உங்களுக்கே இந்தக் கதி என்றால் மற்ற உறுப்பினர் களுக்கு என்ன கதி . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது கேட்க வேண்டிய நேரத்திலே கேட்க வேண்டும். இந்த நேரத்தில், கேள்வி நேரத் தில் கேட்கக் கூடாது.

திரு. க. சுப்பு : தமிழிலே தீர்ப்பு எழுதுகின்றபோது டெக்னிக்கல் டிபிகல்டி இருப்பதாக அதை நீக்கப் போகிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழிலே தீர்ப்பு கள் எழுதவேண்டுமென்று அரசாங்கம் ஒரு கொள்கை வைத்திருக் கிறது. அந்தக் கொள்கை அரசாங்கத்தின் கொள்கை நீதிமன்ற களுக்கும் தெரியும். தமிழிலே தீர்ப்புச் சொல்கிறபோது, ஆங்கிலத்திலேயேயும் எழுதவேண்டுமென்று சொல்லியிருக்கலாம். தமிழிலே தீர்ப்புச் சொல்லியிருப்பதை ஒரு நீதிபதியே, பிரஜூடி ஸோடு, செல்லாது என்று சொல்லியிருக்கிறார். அப்படி அவர் சொல்லியிருப்பது எந்த அடிப்படையில் ? அவர்மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

THE HON. THIRU K. NARAYANASWAMI: There is no question of taking any action against the High Court Judge. Absolutely no disciplinary control is vested in the State Government. For High Court Judges they have got a special Act of 1954, governing their

conditions of service I will give a brief summary of it. The use of Tamil language for the purpose of judgment has been prescribed only for Criminal Courts. It has not been prescribed for Civil Courts. Because, the range of books that ought to be available for Civil Courts, are too numerous and they are not available in Tamil and translated pieces are not available. Therefore, I will read out a portion of 4 B so that Hon'ble Member Thiru K. Suppu may know it. Section 4 B is the Presidential Act. That is a crucial part. They can use Tamil language in courts subordinate to the High Court provided the State Government may appoint different dates in respect of different items referred to in Clauses 1 to 3. Clauses 1 to 3 are: (1) Civil Courts subordinate to the High Court. (2) Criminal Courts subordinate to the High Court. (3) Tribunals. The criminal courts can deliver judgment in Tamil. Civil courts have not been notified because the books that are necessary for rendering judgment, are too numerous and translated pieces of these Acts are not available. The State Languages Commission are now busy with the translation of the Acts. So the Acts are being translated by the Commission. As soon as the translation Acts are available, the Government will have no hesitation to give necessary directions.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவரவர்களே, நீதிமன்றங்ளிலே சிவில் கோர்ட்டில் தீர்ப்பு எழுதுவதற்கான புத்தகங்கள் இல்லை என்று சொல்லுகிறார்கள். புத்தகம் இல்லாமலேயே ஒருவர் எழுதிவிட்டார் என்றால் அதைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். அதைச் செய்யாமல் அவரை டிஸ்கரேஜ் செய்வது மாதிரி அவர் எழுதிய தீர்ப்பே செல்லாது என்று சொன்னால் அதைப்பற்றி மத்திய அரசுக்கு எழுத முடியாதா, எந்த நடவடிக்கையும் எடுக்கத் தகுதியில்லையா. டி.பி. யை விட்டு வெளியேற்றலாம் என்ற நிலை இருக்கிறதே தவிர வேறு ஒன்றுமே முடியாதா என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMI : So for as that judgment is concerned nobody has gone on appeal, that it is an illegal order. That judgment makes out a point out of the omission namely, the power has not been vested in a court and the High Court has passed such an order.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவரவர்களே, சட்டத் துறை அமைச்சரவர்கள் ஆங்கிலத்தில் சொன்னதை அரைகுறையாகப் புரிந்து கொண்டு நான் ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். திரு. சுப்பு அவர்கள் சொன்னதைப் போல தமிழில் தீர்ப்பு எழுதியது செல்லாது என்றுதான் தீர்ப்பு வந்திருக்கிறது. ஆகவே, அரைகுறையாக இருந்தாலும், தமிழிலே தீர்ப்பு சொன்னது செல்லாது என்று விதிமுறைகள் இருக்குமானால் அதற்காக

1979 மார்ச் 20]

என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள். எட்டு மாதங்கள் ஆகின்றன கிட்டதட்ட தீர்ப்புக்கு வந்து. எட்டு மாதங்களுக்குப் பிறகும் இன்னும்கூட சிவில் கோர்ட்டுகளில் தமிழிலே தீர்ப்பு சொல்லும் நிலை இல்லை என்றால் அது சரியல்ல. எனவே அதை எவ்வளவு சீக்கிரம் கொண்டுவரப் போகிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMI : Certainly the well intentioned suggestion made by the Hon'ble friend Kuthakudi Shanmugam will be duly considered and passed under Section 4-B of the Official Languages Act as amended during the President Rule.

திரு. சி. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய சட்ட அமைச்சரவர்கள் ஹைகோர்ட் ஜட்ஜ் மீது மாநில அரசு ஒன்றும் செய்ய முடியாது என்று பதிலிலே சொன்னார்கள். நானும் அரைகுறையாகப் புரிந்து கொண்டேன். அவர் எங்கள் ஊர் முதலியார் இல்லையா, அவசரக் காலத்தில் உயர்நீதி மன்ற நீதிபதியையே கட்டாயமாக வீட்டிற்குப் போகச் சொல்லியிருக்கிறோம். அந்த வகையில் இந்த ஹைகோர்ட் ஜட்ஜை வீட்டுக்குப் போகச் சொல்ல அதிகாரம் இல்லையா, இல்லையென்றால் மத்திய அரசோடு தொடர்பு கொண்டு கட்டாயமாக வீட்டுக்குப் போகச் சொல்ல அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வீட்டுக்குப் போக வேண்டாம், உத்தியோகத்தைவிட்டுப் போக வேண்டுமென்று கேளுங்கள்.

திரு. துரை முத்துசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், '' எங்கள் ஊர் முதலியார் '' என்று சொன்னார், அது சரியா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது பதிலில் இருக்கட்டும், தப்பு இல்லை.

THIRU J. JAMES : The Hon'ble Minister said that this Government has no power to take any action against the High court Judge. Of course, it is a matter of fact. But we would like to know the reason behind the dismissal of the appeal and we feel that it has been dismissed on the ground that it has been written in a regional language. This is a very serious matter. We want to know whether this Government has approached or advised that Judge not to repeat such acts at least hereafter and also advise that judge to give directions to the subordinate judges to write the judgment in English or in any other language. . .

[1979 மார்ச் 20

THE HON. THIRU K. NARAYANASWAMI: So far as the question of the Hon'ble Member Thiru Arumugham is concerned my answer is this. This Government, not even the Central Government has any power to take any action against any High court Judge except for proved incompetence or proved misconduct. That can be done only by way of a motion for impeachment in the Two houses of parliament. Their conditions of service are so secure and they are conceived for ensuring the independecne of the judiciary, and this is from the age old days, Act of 1935 or even earlier. Even the Central Government cannot take action so long as any Judge of the High Court does his legal duty within the bounds of law.

[முற்பகல் 9–50]

மாண்புமிகு பேரவைத் தலைவர்.: வினா எண். 486,......

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே, பெரியார் நூற்றாண்டு விழாவிலே ஜாதிப் பெயர்களையே எடுக்க வேண்டுமென்று சொல்லும்போது, திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர் முதலியார் என்று சொல்வதும் தாங்கள் அனுமதிப்பதும் சரியா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் பேரவை குறிப்பேட்டிலே இருக்கட்டும் என்றுதான் அனுமதித்தேன்.

திரு. சி. ஆறுமுகம் : அஃபிஷியலாகவே நாராயணசாமி முதலியார் என்றுதான் சொல்கிறார்கள்.................

மேல் உயர்நிலைப் பள்ளிகள்.

*வினா எண். 486—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மேல் உயர்நிலைப் பள்ளிகள் திறமையுடன் செயல்பட இப்பள்ளிகளை கல்லூரிகளுடன் இணைக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம், எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்.: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கிடமில்லை.

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் தலைவரவர்களே அண்டையிலே இருக்கிற கர்நாடக மாநிலத்தில் ஜூனியர் காலேஜில் இது போன்ற வகுப்புகள் நடத்தப்படுவதையும் .மற்ற கல்